Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 — போன் 389 — தேசிய தினசரி — மலர் 13 — இதழ் 184

கா ம்ப்பளை — ஆடி 31 — ஜு ஆவ 24 — திங்கட்கிழமை — (16 8 71)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன் 444 — தந்தி: 'இரத்தினம்ஸ்'
50.கன்னாதிட்டி.யாழ்ப்பாணம்.

## மாவட்டங்கள் தோறும் உள்ள

# மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப மாணவர் தெரிவு!

## பல்கலைக்கழகங்களுக்கான புதிய திட்டம் பற்றி திரு. உடகம

கொழும்பு, ஞாயிறு

ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப் படுவார்கள்.

இதற்கான ஒரு திட்டத்தைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு பி ரமநாஸ உடகம இத்தகவலை வெளியிட்டார்

கல்லூரி அதிபர்கள் கூட்ட மொன்றில் பேசிய திரு உடகம, ஆசிரியர்களின் சம்பள விகிதத்தில் இருந்துவரும் வேறுபாடுகள் நீக்கப்படும் என்றார். ஆங்கில விஞ்ஞான ஆசிரியர்களின் பற்றாக் குறையைநீக்குவதற்கு நிறைசேரி நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார் அவர்.

மாறிவரும் உலகத்துக் கேற்ப மாணவர்களின் கல்வி அமையவேண்டும் என்றும் விஞ்ஞான மாற்றங்களை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்

## 75 வீத பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பெற்றனர்

கோட்டை, ஞாயிறு

கூட்டணி அரசு பதவிக்கு வந்தபின்னர் வேலையற்றிருந்த எழுபத்தைந்து சதவீத பட்டதாரிகள் வேலைபெற்றிருக்கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ் 800 பட்டதாரிகள் நாட்டின் பலபாகங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜூன் மாதம் 300 பேர் அபிவிருத்தி அதிகாரிகளாகவும் மேற்பார்வையாளர்களாகவும் இடம்பெற்றனர். இவர்கள் ... பாடவிருந்த அரசாங்கப் பதவிகளில் இடம்பெற்றனர். வருட முடிவுக்குள் எஞ்சியுள்ள பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்க வழிசெய்யப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன

ஈ. வெ. ரா. பெரியார் யோசனை:

## கலைஞர் கருணாநிதிக்கு சிலை வைக்கவேண்டும்

சென்னை, ஆக. 15

தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்துள்ள சேவைகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதிக்கு சிலை அமைக்க வேண்டுமென்றும் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் யோசனை தெரிவித்திருக்கிறார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் திரு. கருணாநிதி டாக்டர் பட்டம் பெற்றதைப் பாராட்டும் முகமாக நடைபெற்ற பகுத்தறிவாளர் கூட்டத்தில் பெரியார் பேசினார்.

தமிழ்நாடு கல்லூரிகளில் மாணவர்களுக்குப் பகுத்தறிவு போதனைகள் நடத்துவதற்கு ஆலோசனை கூறுவதற்கான கமிட்டி ஒன்றை நிறுவவேண்டும் என்றும் பெரியார் யோசனை கூறினார்

பெரியார் யோசனையின் பேரில் திரு. கருணாநிதிக்குச் சிலை அமைப்பது பற்றி ஆவனசெய்வதற்கு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவுக்குப் பெரியாரே போஷகராக விருப்பார்.

இக்கூட்டத்தில் திரு. கருணாநிதி பேசுகையில், சென்னை நகரசபை பெரியாருக்குச் சிலை வைப்பதற்கு முன்னர் தமக்குச் சிலைவைக்கும் யோசனையைக் கைவிடும்படி சொன்னார்

### சிறந்த கவிதைக்கு பரிசு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை சிறிலங்கா குடியரசாகப் போவதை யொட்டி சிறந்த கவிதையும், பாட்டும் புனைகிறவர்களுக்கு பரிசுகள் வழங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

சிறந்த கவிதைக்கு 2500 ரூபா வழங்கப்படும். கவிதைக்கான முடிவு திகதி நவம்பர் 30ம் திகதி பாட்டுக்கான முடிவு திகதி செப்டம்பர் 30ம் திகதி.

முப்படைகளுக்கிடையில்

## சிங்கள பரிபாஷையில் இரகசிய தொடர்புகள்

### ஆங்கிலத்துக்கு கல்தா

கோட்டை, ஞாயிறு

முப்படையினரும் இனிமேல் தங்களின் இரகசியத் தொடர்புகளை சிங்கள மொழியிலேயே வைத்துக் கொள்வார்கள்

வருடக்கணக்காக ஆங்கில மொழியிலேயே இத்தத் தொடர்புகள் இருந்துவந்தன

செய்திகளை ஆங்கிலமொழியிலேயே அனுப்பிவந்த ஆயுதப்படையினர இன்று காலை தொடக்கம் சிங்களத்தில் இச்செய்திகளை அனுப்பத் தொடங்கினார்கள். முன்னோடியாக இன்று காலை கடற்படைத் தளபதி கொமடோர் டி. வி ஹன்டர் சிங்கள மொழியில் அமைந்த பரிபாஷை மூலம் ராணுவ. விமான பொலிஸ் படைகளுக்கு செய்திகளை அனுப்பினார்.

இனிமேல் கடலிலுள்ள இலங்கைக் கப்பல்களுக்கும் தலைமை நிலையத்துக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

முள்ளியவளைக் குழந்தைகள் மரணம்:

## தாய் பொன்மணி மீது கொலைக் குற்றச்சாட்டு

### தந்தை விடுதலை; விசாரணை 28-ம் திகதி

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பகுதியைப் பெரும் பரபரப்பிலாழ்த்திய முள்ளியவளைக் குழந்தைகள் மரணம் சம்பந்தமாக அவர்களின் தாயான இரத்தினம் பொன்மணி மீது கொலைக்குற்றம் சாட்டி முல்லைத்தீவு நீதிபதி திரு விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

முள்ளியவளையில் கிணற்றில் தாம் பெற்ற இரு பிள்ளைகளை வீசிக் கொலை செய்ததாக ரிமாண்டில் வைக்கப்பட்ட முள்ளியவளையைச் சேர்ந்த பொன்னம்பலம் இரத்தினத்தின் மனைவி பொன்மணியும் அவரது கணவரான இரத்தினமும் முல்லைத்தீவு நீதிபதி திரு விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் சிறைச்சாலை ஊழியரால் ஆஜர் செய்யப்பட்டனர் அப்போது முல்லைத்தீவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஜே வி பிள்ளை பொன்மணி மீதான குற்றப் பத்திரிகையை நீதிபதியிடம் சமர்ப்பித்தார்

நீதிபதி எதிரியான பொன்மணியை நோக்கி "நீர் உமது இரு பிள்ளைகளான ஜெயரஞ்சன் (இரண்டரை வயது), ஜெயராஜினி (வயது 1) ஆகிய இருவரையும் கிணற்றில் வீசிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது" என்றார்.

அப்போது கண்களில் கண்ணீர் பெருகப் பொன்மணி மௌனமாய் நின்றார் இவரைப் பார்க்க மக்கள் பெருந்தொகையாகக் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் கூடியிருந்தனர்

நீதிபதி பிள்ளைகளின் தந்தையான இரத்தினத்தை விடுதலை செய்து எதிரியை இம்மாதம் 28-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டு 28-ந் திகதி விசாரணைக்கு ஆயத்தம் செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்

விசாரணை இம்மாதம் 28-ந் திகதி நடைபெறும்

## கேள்வி விளம்பரம்

# இ.போ.ச. சிற்றுண்டிச்சாலை

யாழ் டிப்போ, கோண்டாவில்

கோண்டாவிலிலுள்ள இ. போ. ச. யாழ். டிப்போ சிற்றுண்டிச்சாலைக்கு, சாப்பாடு, சிற்றுண்டி வகைகள் விநியோகிப்பதற்கான முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ் இ. போ. ச. டிப்போ சுப்பிரின்டென்டனால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர் திரும்பப்பெறும் வைப்புப்பணம் பத்து ரூபா செலுத்தி கேள்விப்பத்திரத்துக்கான படிவத்தை கோண்டாவில் டிப்போவில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரத்துக்கான விண்ணப்பங்கள் 10-9-71 பி. ப. 1 மணிக்கு முடிவடையும். 2967



தினசரி பி. ப. 2-00

## றீகல் யாழ்ப்பாணம் இரவு 9-45 மட்டும்

கே. ஏ. தங்கவேலு, அஞ்சலிதேவி,

டி. ஆர். ராமச்சந்திரன் நடித்த புதிய கொப்பி

# அடுத்தவீட்டுப் பெண்

REGAL - Jaffna NOW SHOWING

Daily at 5-00 & 7-15 p.m. only

Sat Sunday 10 30 A. M.

Juli Cristi- Alanbates in

FAR FROM THE MADDING CROWD

(Techni-color)



## ராணி சுந்தரராஜன் - நாகேஷ்

(யாழ்ப்பாணம்) சௌகார்ஜானகி - லக்ஷ்மி

பி. ப. 2-30 இரவு 6-30, 10-00 நடித்த

# கஸ்தூரி திலகம்



## வின்ஸர் தினசரி 4 காட்சிகள்

(யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்

அசோகன், ஜோதிலக்ஷ்மி, நாகேஷ், மனோரமா

மற்றும் பலர் நடித்த

# தலைவன்



## கடைசி வாரம்

இந்தியாவின் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்சியளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.

## லிடோ யாழ்நகர்

தினசரி காலை 10-30, பி ப 2-30, மாலை 6-30, இரவு 10-00



சாதனா

சஞ்ஜே

பால்ராஜ்ஸானி

சப்னம்

நடித்த

# ஏக் பூல் தோ மாலி

(ஹிந்தி)

(ஈஸ்ட்மன் கலர்)



## வெலிங்டன்

(யாழ் நகர்)

தினசரி மூன்று காட்சிகள்

சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி - சரோஜாதேவி

நம்பியார்

நடித்த

# பாலும் பழமும்


## 'தாலிக்கொடியை அறுத்தார்'

மாவிட்டபுரம், வெள்ளி

"சம்பவதினம் ஒழுங்கையால் நான் வந்துகொண்டிருந்தசமயம் எனக்குப் பின்னால் எதிரிவந்தார் அவர்என் கழுத்தில் பிடித்து எடுப்பவும் தாலிக்கொடியை அறுத்தார். அச்சமயம் நான் 'ஐயோ கள்ளன்' என்று சத்தமிடவே எனது மகன் ஓடிவந்து எதிரியைப் பிடித்தார். பின்னர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று புகார் செய்தேன்."

குப்பிளான் தாலிக்கொடி அறுத்த வழக்கில் சாட்சியம் அளித்த பார்வதி என்னும் பெண் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் குப்பிளானைச் சேர்ந்த பார்வதி என்னும் பெண்ணின் தாலிக்கொடியை அறுத்ததாகக் குற்றஞ்சாட்டி பதுளையைச் சேர்ந்த அருட்கலம் என்பவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட இவ்வழக்கு மேல் விசாரணைக்காகப் பின்போடப்பட்டுள்ளது.


## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி பி.ப 6 30, 10-00

டி. ஆர். மகாலிங்கம்-அஞ்சலிதேவி

நடித்த

# மணிமேகலை



## நாகவ்ஸ்சினிமா

கன்னாகம்

Saturday & Sunday 10-30 a.m

Daily 4-30 p.m. only

JASON AND THE ARGONAUTS



3-வது வாரம்

தினசரி மாலை 6-30, 9-45

சனி, ஞாயிறு 2 30,

6-30, 9-45

ஏ. பி. நாகராஜன்- வரலக்ஷ்மி

நடித்த

# ஏழு பிள்ளை நல்லதங்காள்



MANOHARA- Jaffna

Daily

4-45, 7-00 & 9-45 p.m.

Saturday, Sunday 10-30 A.M

John - Philip Law

in

DANGER DIABOLIC

(TechniColor)



## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

பி ப 2-30, 6-30, 10-00

சிவாஜி - சரோஜாதேவி

நடித்த

# ஆலயமணி


நடேஸ்வராவுக்கு

## விவசாய உபகரணங்கள்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் விவசாயம் செய்வதற்காக பல ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மக்கள் அரச பாடசாலைகளில் விவசாயக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்குடன் இந்த உபகரணங்களை வழங்கியுள்ளது.

மண்வெட்டி, பிக்கான் அலவாங்கு போன்ற உபகரணங்களை வழங்கியுள்ளதோடு குப்பைகளைக் அகற்றுவதற்கு சிறுசிறு வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன


## நாவற்குளி வீடமைப்புத் திட்டம்

வட இலங்கை வீடமைப்புச் சங்கத்தின் மேற்படி திட்டத்தின் கூட்டம் 18-8-71 புதன்கிழமை மு. ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம், கச்சேரியடி Y. M C A மண்டபத்தில் வீடமைப்பு ஆணையாளரின் சமூகத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் தவறாது சமூகம் தருக.

எஸ். கந்தமூர்த்தி,

கௌரவ காரியதரிசி

80, பலாலி வீதி,

யாழ்ப்பாணம். 2648



## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

## தேவை

ரிரச்சிங், பினிஷிங் (Retouching finishing) வேலைகளில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. உடனடியாக நேரில் விண்ணப்பிக்கவும். குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி. 3472

## விற்பனைக்கு

ராஜா சேசரி பவுடர்!

மனோரம்மியமான வாசனை கொண்ட கேசரி பவுடர் கோவில்களிலும் விழாக்களிலும் கேசரி தயாரிப்பதற்கும் மிகவும் உபயோகமானது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார்தெரு, கொழும்பு. 3410

## விலைஏற்றம்

அரியாலை, வெள்ளி

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் அறுபது தொடக்கம் எழுபது ரூபாய் வரை விற்கப்பட்ட கருச் செட்டைகள், இவ்வாரம் தொண்ணூறு தொடக்கம் நூறு ரூபாய் வரையும் விற்கப்படுகின்றன.


## மரண அறிவித்தல்

### சபாபதி பாலசுப்பிரமணியம்

வழக்கறிஞர் சபாபதி பாலசுப்பிரமணியம் எல். சி. & என். பி. காலமாகிவிட்டார். இளைப்பாறிய யாழ்ப்பாண மாநகரசபைக் காரியதரிசியான இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும், கலாபாலேஸ்வரி, விஜயராசகேஸ்வரி (ஆசிரியை, சேக்கெறட்டாற் கொன்வென்ற், காலி) அவர்களின் தந்தையாரும், ஆ. கணேசலிங்கம் (விசேஷ கிளா. கட்டிட திணைக்களம் கொழும்பு) அவரது மாமனாரும், கேசவன், கோமதி அவர்களின் பாட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (16-8-71) மாலை 4 மணியளவில் இலக்கம் 36, 'சபாபதி இல்லம்' இந்துக் கல்லூரி ஒழுங்கையிலிருந்து ஈமைக்கிரிகைகளுக்காக, யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 2643


16-8-71 இன்று முதல்

## ராஜா யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10.00 மணி

★ எம். ஜி. ஆர்.

★ வைஜயந்திமாலா

★ பாலையா

நடித்த

# பாக்தாத் திருடன்

(புதிய கொப்பி)

# யுத்தத்தை விரும்பவில்லை, மிரட்டலுக்கும் அஞ்சவில்லை

## சுதந்திரதின விழாவில் பாரதப்பிரதமர் முழக்கம்

புதுடில்லி, ஆகஸ்ட் 15

'சண்டையை பாரதம் விரும்பவில்லை. ஆனால் சண்டை பயமுறுத்தல்களுக்கு நாங்கள் அஞ்சவும் மாட்டோம்'. இவ்வாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று கூறினார்.

இந்தியாவின் 25வது சுதந்திர தினத்தையொட்டி பிரதமர் திருமதி இந்திரா காந்தி டில்லியிலுள்ள செஞ்சதுக்கத்தில் பேருரை நிகழ்த்தினார்.



இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும் தன்னை ஓர் போர்வீரனாக எண்ணிச் செயல்பட வேண்டும். ஏழ்மையையும் கஷ்டத்தையும் எதிர்த்து நாம்போராடியாகவேண்டும் என்று திருமதி காந்தி சொன்னார்.

எவரிடமிருந்தும் எதையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. ஆனால் அதிக சொத்துள்ளவர்கள் அதனை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும் என்றார்.

தேர்தலின்போது நாம் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சிகள் எடுத்துவரும் வேளையில் 75 லட்சம் வங்கதேச அகதிகள் இங்கு குடிபெயர்ந்து வந்துள்ளார்கள். இந்தப் பெரும் பிரச்னையை எதிர்நோக்க நேர்ந்தது. இந்தியா தனது பாரம்பரியத்துக்கு ஏற்ப இந்த அகதிகளை பேணுவதற்கு முன்வந்துள்ளது. இந்த அகதிகளின் போராட்டம் அனுதாபத்துக்குரியது. சுதந்திரத்தை விரும்பும் எல்லா நாடுகளும் இவர்களை ஆதரித்தேயாக வேண்டும் என்று பிரதம மந்திரி தொடர்ந்து கூறினார்.

சோவியத் யூனியனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் பற்றி பிரதமர் குறிப்பிடுகையில் இந்த ஒப்பந்தம் நமது மண்டல சார்பற்ற கொள்கைக்கு எதிரானதல்ல. நமது ஆதாரக் கொள்கைகளை இதன்மூலம் நாம் விட்டுக்கொடுத்துவிடவில்லையென்றார்.

இந்த வைபவத்தில் அமெரிக்க செனட்டர் கென்னடியும் பார்வையாளராக வந்திருந்தார்

## கேந்திர நிலைகள் மீது விமானத்தாக்குதல்

கிழக்குப் பாகிஸ்தானில் விடுதலைப் படையினரின் கேந்திர நிலைகள்மீது கடுமையான விமானத் தாக்குதல்களை பாகிஸ்தான் ராணுவம் நடத்திவருகின்றது.

மைமன்சிங் அரங்கில் விடுதலைப்படையினரின் கேந்திர பாசறைகள் இருக்கும் காடுகளின்மீது பாகிஸ்தான் ராணுவ விமானங்கள் கடந்த ஒருமாதமாகவே குண்டுகளை வீசிவருகின்றன. இப்பகுதியில் விடுதலைப்படையினரை சிதைத்துவிடுவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இன்னமும் இப்பகுதிகளை விடுதலைப் படையினரே தம்வசம் வைத்திருக்கிறார்களாம். விடுதலைப் படையினர் பல இடங்களிலும் பாகிஸ்தான் ராணுவத்திற்கு எதிராக கொரில்லாத் தாக்குதல்களை நடத்திவருகிறார்கள். ஓர் இடத்தில் விடுதலைப் படையினர் நடத்திய தாக்குதலின்போது 27 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

டக்காவில் நேற்று நடைபெற்ற சுதந்திரதினக்கூட்டத்துக்கு பலத்த ராணுவப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

### முஜிபுர் பற்றி கவலை

ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீதான விசாரணை இரகசியமாக நடத்தப்படுவதை சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் கண்டித்திருக்கின்றது. சயானுவின் முன்னாள் பிரதமர் திரு. செட்டி ஜகனும் ஷேக் முஜிபுர் மீதான விசாரணைகளை இரகசியமாக நடத்தப்படுவதைக் கண்டித்திருக்கிறார். திரு ஜகன் இப்பொழுது இந்தியாவிலிருக்கிறார். அகதிகள் இருக்கும் இடங்களை அவர் போய்ப் பார்க்கவிருக்கிறார்.

வட அயர்லாந்தில்

## தொடர்ந்து குழப்பம்

பெல்பாஸ்ட் ஆகஸ்ட் 15

வட அயர்லாந்தில் தொடர்ந்து குழப்பங்கள் நடைபெற்றுவருகின்றன. நேற்றைய மோதல்களின்போது சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். பல இடங்களில் குழப்பக்காரர்கள் ராணுவத்தினர்மீது குண்டுகளை வீசித் தாக்கினார்கள். அரசாங்கக் கட்டிடங்கள் பலவும் தகர்க்கப்பட்டன.

## பிரான்ஸ் அணுகுண்டு சோதனை

பாரிஸ் ஆகஸ்ட் 15

பசுபிக் சமுத்திரத்தில் மேலும் ஒரு சக்தி வாய்ந்த அணுகுண்டை பிரான்ஸ் வெடித்து பரிசோதித்திருக்கின்றது. மேலும் ஒரு அணுகுண்டுகளை பிரான்ஸ் அடுத்தமாதம் பரிசோதிக்கவிருக்கின்றது.

பிரான்ஸ் பசுபிக் சமுத்திரத்தில் அணுகுண்டு சோதனை நடத்துவதற்கு அப்பகுதியிலுள்ள பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

# ஐ. நா. வரம்பை யுதாண்ட் மீறிவிட்டாராம்

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆகஸ்ட் 13

கிழக்குப் பாகிஸ்தான் விடுதலை வீரர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை பாகிஸ்தான் அரசாங்கம் இரகசியமாக விசாரித்துத் தண்டனைவிதித்தால் வெளிநாடுகளில் எதிர்விளைவுகள் ஏற்படும் என்று ஐ நா பொதுச் செயலாளர் யுதாண்ட் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார் அல்லவா? அதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

ஐ நா ஸ்தாபனத்தின் வரம்புக்குமீறிய செயலாகும் இது என்று யுதாண்ட் மீது பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீதான விசாரணைகள் ஆரம்பமாகிவிட்டதாகச் செய்திகள் வந்துகொண்டிருந்தபோதிலும் பாகிஸ்தான் அரசாங்கம் இந்த விசாரணை பற்றிய தகவல் எதையும் இதுவரையில் வெளியிடவில்லை.

51 வயதான ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீதான இரகசிய விசாரணைகள் ஆகஸ்ட் 11-ம் திகதி ஆரம்பமாகும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. பாகிஸ்தான் மீது போர் தொடுத்ததாகவும், வேறு குற்றச்சாட்டுகள் மீதும் இவர் ராணுவ நீதிமன்றம் ஒன்றினால் விசாரிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அறிவிக்கப்பட்டபடி விசாரணை ஆரம்பமாகியதா இல்லையா என்பது பற்றிய தகவல் எதுவும் இதுவரைகிடைக்கவில்லை. மார்ச் 26-ம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டதிலிருந்து காவலில் வைக்கப்பட்டுள்ளார். வங்காளதேசப் பிரிவினை கோரும் அவாமிலீக்கினர் ஆரம்பித்த போராட்டங்களை நசுக்குவதற்காக ஜெனரல் யாஹ்யாகான் ராணுவத்தை அனுப்பியவுடனே ஷேக் முஜிபுர் ரஹ்மான் கைதுசெய்யப்பட்டார். ஷேக்கின் ஆதரவாளர்கள் கிழக்குப் பாகிஸ்தானை வங்காளதேசம் என பிரகடனம் செய்து ஷேக் முஜிபுர் ரஹ்மானை அதன் அதிபராகவும் அறிவித்தனர்.

ஷேக் மீதான விசாரணை கிழக்குப்பாகிஸ்தானின் நிலைமைகளை மேலும் மோசமாக்கி இந்திய பாகிஸ்தான் நெருக்கடிகளையும் விரிவுபடுத்திவிடும் என்று வெளிநாடுகளில் கருதப்படுகிறது.

ஷேக் மீது ராணுவ நீதிமன்றம் மரணதண்டனைவிதிக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது. ராவல்பிண்டியிலிருந்து சுமார் 100 மைல் தொலைவிலுள்ள பாதுகாப்பான சாஹிலால் என்ற இடத்தில் ஷேக் விசாரிக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு நிருபர்கள் பலர் நம்புகிறார்கள்.

## கீல்வாத நோயாளிகளுக்கு செயற்கை முழங்கை

லண்டன், ஆக 14

கீல்வாதத்தினால் அவஸ்தைப்படுவோர், செயற்கை முழங்கை மூட்டின் உதவியுடன் தமது தொல்லையை ஒழித்துக்கொள்ளலாம்.

செயற்கை முழங்கை மூட்டைப் பொருத்தி லண்டனில் நடத்தப்பட்ட சோதனைகள் பெருவெற்றியை அளித்துள்ளன. 15 நோயாளிகளுக்கு 16 செயற்கைமூட்டுகள் பொருத்தப்பட்டன. இரண்டுஆண்டுகளாக இதன் விளைவுகள் கண்காணிக்கப்பட்டன.

பன்னிரண்டு செயற்கை மூட்டுகள் நல்ல பலன் அளித்தன. நோயாளிகளுக்கு நோவு முற்றாக நீங்கி, அவர்கள் கைகளை நன்குநீட்டி வேலைசெய்ய முடிந்தது. மூன்று மூட்டுகள் குறிப்பிடத்தக்க அளவு பலனை அளித்தன. ஒருமூட்டு மட்டும் ஆரம்பத்தில் சரிவர இயங்கத் தவறிவிட்டது.

இந்தப் புதுமையான செயற்கை மூட்டுகள் "கோபால்ட்" உலோகத்தில் ஆனவை.

கீல்வாதத்தை மாற்றவே முடியாத நிலைமை ஏற்படும்போது இந்தச் செயற்கை மூட்டுகள் 'கைகண்ட' மருந்தாகின்றன.


# ராதா குருபற்பொடி

பற்களை வெண்மையாக்கி வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது பல்வலி, பல் அரணை, முரசு கரைதல், வாய்நாற்றம் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்;

எங்கும் கிடைக்கும்.

ராதா குருபற்பொடி

என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்:

"ராதா புரடக்ஸ்"

ஏக விநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனைதிகள் வியாபாரம்.)

53, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 541

'பாலேந்திரா பில்டிங்' 160, செட்டியார் தெரு. கொழும்பு-11

# சித்ரபாடம் சிறப்புறுகிறது- சிறுவர்கள் குதூகலிக்கிறார்கள்

வடபகுதி சித்திர ஆசிரியர்களுக்கான புத்தூக்க வகுப்பை நாளைக் காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் பி. உடகம தொடக்கி வைப்பதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

125 சித்திர ஆசிரியர்கள் பங்கு பற்றும் இவ்வகுப்பு தொடர்ந்து ஐந்து தினங்கள் நடைபெறும்

எல்லாப் பாடங்களுக்கும் மூலாதாரபாடமாய், அழகுணர்ச்சியை வெளிப்படுத்தும் பாடமாய் மாணவரை இன்பத்தில் ஆழ்த்தும் பாடமாய் அமைந்திருக்கும் சித்திரபாடம் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஓரளவு புறக்கணிக்கப்பட்டு 'ஏனோ தானோ' என்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பாடத்துக்கான வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படவில்லை. எஸ். ஆர். கனகசபை என்ற புகழ்பெற்ற வித்தியாதரிசிக்குப் பின் அப்பாடத்துக்கான வித்தியாதரிசிகள் பாடசாலைகளை எட்டிப் பார்க்கவுமில்லை. இதனால் ஆசிரியர்கள் அக்கறை செலுத்தவில்லை. மாணவர்களும் அப்படி ஒரு பாடம் இருப்பதே மறந்துபோனார்கள்.



1968-ம் ஆண்டில் திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் வடமாநிலச் சித்திர வித்தியாதிகாரியாக நியமனம் பெற்றார்கள். புகழ் மிக்க கலைக் குடும்பத்தில் பிறந்தவர் அவர் வித்தியாதிகாரியாக வருவதற்கு முன்னரேயே 'ஓவியக் கலை' சிறுவர் சித்திரம் என்ற நூல்களை ஆக்கியவர். சித்திரம் அவர் உதிரத்தில் ஓடும் பண்டம். எனவே அவர் வடபகுதியில் சித்திரக்கலையை முன்னேற்றிவிடுவார் என்று ஆசிரிய உலகம் நம்பியது அந்த நம்பிக்கை வீண் போகவில்லை 1968-1971 ஆகிய இந்த இடைப்பட்ட காலத்திலே அவர் மூன்று வகையான பணிகளை ஒழுங்காக ஆற்றினார். முதலாவதாக வட பெரும்பாகத்திலுள்ள மூலைமுடுக்குகளிலுள்ள சிறிய பாடசாலைகளுக்கெல்லாம் தரிசித்து இப்படத்தில் ஆசிரியர்களுக்குள்ள குறைகளை விசாரித்து இயன்றளவு சித்திரப் பாடத்தை ஒழுங்காக நடாத்த முயற்சித்தார். இரண்டாவதாக வட்டாரம் வட்டாரமாக ஆசிரியர்களுக்குப் புதிய முறையிலே சித்திரப் பாடத்தை எப்படி நடாத்துதல் வேண்டுமென வகுப்புகள் நடாத்தினர் கிட்டத்தட்ட 250 ஆசிரியர்களுக்கு மேல் வாராவாரம் (16 வகுப்புகள்) வருகை தந்து பயன் பெற்றனர். மூன்றாவதாக வட்டாரரீதியில் (ஒருசில வட்டாரங்களைத் தவிர்ந்து) சிறுவர் சித்திரக் காட்சிகளை நடாத்தி அதுசம்பந்தமான அரிய வெளியீடுகளையும் வெளியிட்டார். அந்தக் காட்சிகளைப் பார்த்த மாணவர் உண்மையிலேயே குதூகலித்தார்கள்; பேருவகை பூத்தார்கள்.

எல்லாவற்றுக்கும் சிகரமாக கவி நூற்றாண்டு விழாவை ஒட்டி 600 படங்களைக் கொண்ட சித்திரக் கண்காட்சி துலங்கியது. யாழ்ப்பாணக் கலைக்கழகம் என்ற அமைப்பை அவர் ஏற்படுத்தியதோடு நல்ல சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்தும், முதியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஓவிய வகுப்புகளை நடாத்தியும் பெரும் பணி செய்கிறார்.

1970-ம் ஆண்டில் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நான்கு நாட்கள் தங்கி 125 ஆசிரியர்கள் சித்திரப் பாடம் பற்றிய நுணுக்க அம்சங்களை அறிந்துகொண்டனர் அதேபோல் இவ்வருடமும் ஆவணி 17ந் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் ஐந்து நாட்கள் நடைபெறப் போகின்றது. இத்தருணத்தை ஆசிரியர்கள் இழந்துவிடக்கூடாது. உண்மையாக ஒரு கலை வளரவேண்டும் சிறுவர் சித்திரம் ஓங்கவேண்டும் என்று விரும்பும் யாரும் திரு ஆ. தம்பித்துரை அவர்களின் பணியைப் போற்ற வேண்டும் இதோ வடமாநிலக் கல்வி அதிபதியாகிய டபிள்யு டி. எல் மகந்தல அவர்கள் இங்கு நடைபெறும் சித்திரக் கல்வி பற்றிய நன் முயற்சிகளைப் பின்வருமாறு வாழ்த்தினார்.

"சித்திரக்கல்வி பற்றிய விழிப்புணர்ச்சி ஒன்று இப்பொழுது உருவாகின்றது. இதை உணரும்போது எமது இதயங்கள் பூரிக்கின்றன ஏனெனில் சித்திரம் என்கின்ற ஊடக மூலமே குழந்தையானது தன்னுள் பொதிந்துள்ள அழகியல் உணர்ச்சிகளையும் ஆக்கத்திறமைகளையும் புலப்படச் செய்கின்றதென்பது இப்பொழுது எல்லோராலும் முற்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்."

உண்மையாகவே கிராமப் புறப் பாடசாலைகளிலும் இப்போதுதான் சித்திரக் கல்வி சிறப்புறத் தொடங்கியிருக்கிறது. சிறுவர்கள் குதூகலிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் அதனை ஒரு தொண்டாகவே செய்துவரும் திரு ஆ. தம்பித்துரையை வாழ்த்துவது நமது கடன் வாழ்க அவரது சித்திரப்பணி! வளர்க ஓவியக்கலை. — இரசிகமணி

## விரைவில் நிறுவித் தருக

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறையில் அமைப்பதற்கென தீர்மானிக்கப்பட்ட மின்தறி நிலையத்தை அதற்கென காணி சுவீகரிக்கப்பட்ட பின்பும் தாமதப் படுத்துவதையிட்டு இச்சங்கம் வருத்தம் தெரிவிக்கிறது. துரிதநடவடிக்கை மேற்கொண்டு இந் நிலையத்தை நிறுவித்தரவேண்டும்.

இவ்வாறு கைத்தொழில் அமைச்சரையும் காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினரையும் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு வி பொன்னம்பலத்தையும் கோரும் தீர்மானம் ஒன்று காங்கேசன்துறை வரியிறுப்பாளர் சங்கத்தின் விசேட கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் திரு ப. சுப்பையா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## இன்றைய பலன்

ஆடி மாதம் 31-ம் திகதி (16-8-71)

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

மேஷம்- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். வணிகவிவகாரத்தின் மூலம் பணம் தோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

ரிஷபம்- அடிசறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம்பெறலாம். ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு. பிரயாணத்தை தவிர்ப்பது விரும்பத்தக்கது

மிதுனம்- பிரச்னைகள் பல இன்று நல்ல முறையை அடையும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பேச்சில் நிதானம் பெருமையைத் தரும்.

கடகம்- புதிய துறைகளில் ஈடுபடுவீர்கள், வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு, புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம். இன்று நல்லநாள்.

சிம்மம்- கொள்வனவுகளில் நல்லதிருப்பங்கள் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு. கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும்.

கன்னி- நினைத்ததைமுடிப்பதில் இன்று வெற்றிகாண்பீர்கள், தொழில்துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு, சிலர் வாழ்க்கையில் காதல் விவகாரமும் ஏற்படலாம்

துலாம் எதிர்பார்த்தமுன்னேற்றத்திற்முட்டுக்கட்டை உருவாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் கவலைப்படுவீர்கள்.

விருச்சிகம்- வாழ்க்கை கரும்புபோல் இனிக்கும். காதல் வட்டாரங்களில் கலகலப்புத் தென்படும். இல்லத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும்

தனுசு- நிழலுடன் போராட்டம் நடத்துவீர்கள் உங்கள் செல்வாக்கைக் குறைப்பதற்காக எதிரிகள் கண்துடைப்பு வேலைகள் நடத்துவர்.

மகரம்- விருந்துபசாரங்களின் மூலம் பணம் பெருமளவில் செலவாகும்.

கும்பம்- செய்தொழிலில் தடைகள் உருவாகும். மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும், நிதானம் நன்று.

மீனம்- செலவுக்குவேண்டியபணம் தாராளமாகக் கிடைக்கும், உறவினர் ஒருவருக்கு உதவிசெய்யவேண்டிய அவசியம் ஏற்படலாம்.



## ஆவரங்காலுக்கு இவர் இழப்பு பெருநஷ்டம்

ஆவரங்காலைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. தம்பு செல்லவிநாயகத்தின் (சந்தனம்) பிரிவைக்கேட்டு, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் துயருறுகிறது.

இவர், அச்சுவேலி உலவிக்குளம் விநாயகர் ஆலய ஸ்தாபகர் பரம்பரையினர். தந்தை எவ்வழி தனயனும் அவ்வழி என்ற உண்மைக்கிணங்க, குலவொழுக்கமும் தெய்வவழிபாடும் மிக்கவர்.

பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதை உணர்ந்து அயரா உழைப்பால் பொருளீட்டி உயர்ந்தவர். 'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை' என்பதை படித்து, அதன் வழிவாழ்ந்தவர். நடுவூரில் நின்ற நச்சமரம் போலல்லாது, பிறருக்குத் தகுதியறிந்து நல்கும் சான்றுடையவராய் வாழ்ந்த உத்தமர். இன்சொல்லன்றி, வன்சொல்லறியாது எவர்க்கும் தீங்கின்றி உபகாரியாய் வாழ்ந்து காட்டியவர்.

மாகிபொடை, கொழும்பு போன்ற இடங்களில் பலவித வர்த்தகத்துறையில் ஈடுபாடு கொண்டு புகழீட்டியவர். கொள்ளுப்பிட்டி செல்வ விநாயகம் என்றால் எவரும் அறிவர் இவ்வாறு தமது விடாமுயற்சியாலும் தயாள சிந்தையாலும் உயர்ந்து அறிந்தார் உள்ளங்களில் எல்லாம் இடங்கொண்டனர். இறுதிக்காலத்தில் சொந்தக் கிராமத்தில் ஆறியிருந்து மக்களுக்கும் இறைவனுக்கும் பணிசெய்ய முனைந்தார். அதன் பேறாக, ஆவரங்கால் சிவாலயத் திருப்பணிச் சபையின் தலைவராக விளங்கியதுடன் அத்திருப்பணியில் பெரும் பங்கு கொள்ளவும் உளங்கொண்டிருந்தார். இவ்வாறே ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலையின் புதியகட்டடம் முற்றுப் பெறுவதற்குரிய பெரும்பணியையும் ஏற்கத் தாராள மனதுடன் வாக்களித்திருந்தார் எமது கிராமச் சிவாலயமும், சைவ வித்தியாசாலையும் துரதிஷ்டம் முன்னைபோலும். அச்சுவேலி உலவிக்குள விநாயகர் ஆலயப் புனருத்தாரணப் பணிகளில் ஈடுபாடு கொண்டு. கணிசமான அளவு பணியாற்றி மகிழ்ந்த வண்ணம், தமதாரின் பணிகளைத் தாமே முன்னின்று செய்து தமது கண்ணால் காணும் பாக்கியமற்றவராய் அகால மரணமடைந்தார்.

அன்னாரது அந்தியேஷ்டிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்றவேளை அவர் ஆன்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம்.

— ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலைப் பெற்றார் ஆசிரிய சங்க நிர்வாகிகள்

## உற்சவம்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் இருபத்தி மூன்றாந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி பதினைந்தாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## சக்தி வழிபாடு

அல்லைப்பிட்டி, ஞாயிறு

இன்று நேற்றல்ல பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சக்திவழிபாடு வழக்கத்திலிருந்து வருகின்றது. தமிழ் மக்கள் பெண்களுக்குரிய இடம் அளித்து வந்தனர். மகாகவி பாரதியாரின் காலத்தில் பெண்களுக்குரிய அந்தஸ்து மறுக்கப்பட்டுவந்தது. இதனைக் கண்டு பாரதியார் மனங்கலங்கினார் அவரின் முயற்சியினால் மீண்டும் பெண்களுக்குரிய இடம் அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்மக்கள் பெண்களைப் போற்றிவந்தனர் என்பதற்கு உதாரணமாக சக்திவழிபாடு விளங்குகின்றது''

இவ்வாறு வேலணை நாகவர் மடத்தில் பதினொரு நாட்கள் நடைபெற்ற கந்தபுராணச் சொற்பொழிவுகளில் [illegible] திநாளன்று "சக்திவழிபாடு" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றிய போது செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

திரு. கா. க. செல்லப்பா சுவாமிகள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

கைத்தறிநெசவு

## பதிவுசெய்ய 18ந் திகதிவரை அவகாசம்

கோட்டை, வெள்ளி

பதிவுசெய்யப்பட்ட கைத்தறி நெசவு நிலையங்களுக்கு மட்டுமே இனிமேல் நூல்கள் மற்றும் ரசாயனப்பொருட்கள் வழங்கப்படும். அத்துடன் நெசவுத்துணிகளும் சந்தைப்படுத்தப்படும்.

இலங்கை பூராவுமுள்ள பதிவுசெய்யப்படாத கைத்தறி நெசவு நிலையங்களை பதிவு செய்வதற்காக அனுப்பியுள்ள விண்ணப்பங்கள் சிறுகைத்தொழில் திணைக்களத்தில் பரிசீலனையிலிருக்கின்றன அவைகளின் அமைப்புப் பற்றியும் பரிசீலனை செய்த பின்னர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

இன்னும் பதிவுசெய்யாதிரு விண்ணப்பிக்காதவர்களை இம்மாதம் 18ந் திகதிக்குள் விண்ணப்பிக்கும்படி சிறுகைத்தொழில் திணைக்களம் கேட்டுள்ளது.

பட்டதாரிகள் பயிற்சி

## 84 பேர் மேலும் தெரிவு

கோட்டை, வெள்ளி

பட்டதாரிகள் பயிற்சித் திட்டம் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. நேற்று பட்டதாரிகள் பயிற்சிக்காக மேலும் 84 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்

பட்டதாரிப் பயிற்சியாளர்கள் தேசிய ஒற்றுமைக்காக ஒத்துழைக்கவேண்டும். இவர்களின் கடுமையான உழைப்பிலேயே நாட்டின் சுபிட்சம் தங்கியுள்ளது' என்று நேற்று மேற்படிபயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் மத்தியில் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் குறிப்பிட்டார்.

## இன்று பரமஹம்ஸர் நினைவு தினம்

# காளிதேவி காட்சிகொடுத்த சதாதரன்

'இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த முப்பது கோடி மக்களின் ஆத்மீக வாழ்க்கையின் அனுபவ நிறைவுதான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர்' என்று ரோமா ரோலான் என்ற பிரபல பிரெஞ்சு ஞானி கூறினர்.

'நாட்டமுறையில் சமயம் என்பதன் வரலாறு தான் ஸ்ரீராம கிருஷ்ணரின் வாழ்க்கை' என்ருர் மகாத்மா காந்தி.

இத்தகைய மகான் 1836-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி வங்காள தேசத்திலுள்ள கமார்புகூர் என்ற கிராமத்தில் அவதரித்தார். தந்தையார் பெயர் குடிராம் சட்டர்ஜி தாய் சந்திரமணி தேவி. சதிகார ஜமீந்தார் ஒருவரால் வஞ்சிக்கப்பட்டு குடிராம் குடும்பம் சொந்த ஊரைவிட்டு கமார்புகூரில் குடியேறியபோது அவர்களுக்கு ராம்குமார், காத்யாயினி, ராமேஸ்வரர் என்று மூன்று குழந்தைகள் இருந்தனர். தெய்வீக அருளால் பிறந்த நான்காவது குழந்தைக்கு கதாதரன் என்று பெயரிட்டனர்.

கதாதரன் மிக இளம் வயதிலேயே புராணக் கதைகளைக் கேட்பதிலும் ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடுவதிலும் விருப்பம் காட்டி பின்னும் தனக்கு உண்டாகப்போகும் தெய்வீகத் தன்மைக்கு முற்சான்று கூறினன். மதசம்பந்தமான நாடகங்களில் நடிப்பான். மண்ணில் விக்கிரகம் சமைத்து வழிபடுவான், தனித்திருந்து வெகு நேரம் தியானம் செய்வான். சாதுக்களுடன் சம்வாதம் செய்வான்.

ஏழாவது வயதில் தந்தையார் இறந்துவிடவே கதாதரனை தமையன் ராம்குமார் தன்னோடு அழைத்துக்கொண்டார். கல்கத்தா நகரத்துக்கு அருகிலுள்ள தட்சணேஸ்வரத்தில் ராணி ராசமணி அம்மையார் மாபெரும் காளிகோயில் ஒன்றை அமைத்து அதற்கு பூசகராக ராம்குமாரரை நியமித்திருந்தாள். தமையனுக்கு உதவியாக வந்த கதாதரனின் தெய்வப் பற்றையும் ஒழுக்க சீலங்களையும் கவனித்த ராணியும் அவருடைய மருமகன் மதுர் பாபுவும் ராம்குமாருக்குப் பிறகு கதாதரனிடமே காளி கோவில் வழிபாட்டு வேலைகளைக் கவனித்து வர அனுமதியளித்தனர். காளி கோயிலுக்கு அருகிலுள்ள பஞ்சவடி என்னுமிடத்தில் தான் ராமகிருஷ்ணர் தமது சாதனைகளைப் பயின்று ஆத்மீக வாழ்க்கையின் மேலான அனுபவங்களைப் பெற்ருர்.

ஆராதனை செய்யும்போது காளியின் உருவம் அவருக்கு கல்லாகத் தோன்றவில்லை. காளியையே பிரத்தியட்சமாகக் காண்பதுபோல அவளோடு அளவளாவுவார்.

இப்படி கடுந்தவம்புரிந்த ராமகிருஷ்ணருக்கு ஒருநாள் தேவி நேரில் தோற்றப்பட்டாள். இந்தமுதற்காட்சியை அவரே பின்வருமாறு வர்ணிக்கிருர்: "தாயைக் காண முடியவில்லையே என்ற மனச்சுமையை என்னல் தாங்க முடியா மற்போய்விட்டது. ஈரத்துணியிலுள்ள நீரைப் பிழிவதுபோல என்நெஞ்சை முறுக்கிப்பிழிவது போலிருந்தது. தாயைக்காணமுடியா மற்போய்விடுமோ என்ற ஏக்கத்திலும் வெறுப்பிலும் கோயிலிலிருந்த கத்தியை எடுத்து என் தலையைவெட்டி விடத்துணிந்தேன். பித்துப் பிடித்தவனைப்போல ஓடிப் போய் அதைப்பற்றினேன். உடனே வியக்கத்தக்க ஒரு காட்சிகிடைத்தது. உணர் விழந்து விழுந்துவிட்டேன். அன்றும் மறுநாளும் என்ன நடந்ததென்று எனக்குத்தெரியாது. ஆனல் முன்னெருபோதும் கிடைக்காத ஒரு பேரின்ப நிலையை எய்திவிட்டேன்."

இவருடையபோக்கை கவனித்தவர்கள் ஆளுக்குமூளைக் கோளாறு ஏற்பட்டுவிட்டதென்று நினைத்தார்கள். இதைக்கேள்வியுற்ற தாயார் சந்திரமணி மிகவருத்தமுற்று தமது அருமைப்புதல்வனுக்கு திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று முடிவுசெய்தாள். ராமகிருஷ்ணர் அதற்கு ஒரு தடையும் சொல்லவில்லை. தமது இருபத்து மூன்ருவது வயதில் ஆறு வயதான சாரதாதேவியை மணம்செய்துகொண்டார். ஆனல் திருமணம் ஆத்மீக வாழ்க்கைக்கு இடையூருக நிற்கவில்லை. சாரதாதேவி தன் வாழ்நாள் முழுவதும் அவருடைய சிஷ்யையாகவே தொண்டுசெய்துகாலம்கழித்தார்.

இப்படி இருக்கும் நாளில் தோதாபுரி என்னும் ஒரு மகான் ராமகிருஷ்ணருடைய பக்தி, வைராக்கியம், அறிவு, சாந்தம், சிரத்தை முதலிய அரிய குணங்களைக்கண்டு, அத்வைத முறையை அனுஷ்டிக்க இவரே சிறந்தவர் என்று நினைத்து அந்த உண்மையை உபதேசித்தார். பிரம்மத்தின் தத்துவத்தையும் அதன் உண்மையையும் விளக்கினர். இவற்றையெல்லாம்கேட்டு கிரகித்துக் கொண்ட ராமகிருஷ்ணர் நிர்விகல்ப சமாதியில் அடிக்கடி ஆழ்ந்து சச்சிதானந்த நிலையை அடையும் வழியில் யோகம்புரிந்தார்.

பிற சமயங்களின் இஸ்லாமிய வேதத்தை அறியும் பொருட்டு முகம்மதிய வேடம்பூண்டு வழிபாடுசெய்வார். சிலகாலம் பேசுநாதர் போல உடையுடுத்து கிறிஸ்தும தத்துவங்களை ஆராய்வார். இவ்வாராய்ச்சிகளின் பலனாக எல்லா சமயங்களும் ஒரே உண்மையையே அறிவுறுத்துகின்றன என்ற முடிவுக்கு வந்தார்.

ராமகிருஷ்ணருடைய வளர்ச்சி பல இளைஞர்களை அவர்பால் இழுத்தது. இவர்களில் முக்கியமானவர்கள் விவேகானந்தரும் பிரம்மானந்தரும். சீடர்களுக்கு அடிக்கடி ஏற்படும் சந்தேகங்களை தக்கவிளக்கம்காட்டி விளக்கி போதனைசெய்து வந்து 1886ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மகாசமாதி அடைந்தார்.

- வழிப்போக்கன்

# நல்லூர் நாற்பது

[ கவிஞர் வி. கந்தவனம் ]

## வேண்டும்பத்து

['நல்லூர் நாற்பது' என்னும் இக்கவிதை நூல் இன்றுமாலை நூல்வடிவில் வெளிவருகிறது. நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இன்று மாலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் நூல் வெளியிட்டு வைப்பார்]

நன்ருகும் வாழ்விங்கு நாளை நம்மோர்
நடிப்பின்றி நஞ்சின்றி நல்லோர் வல்லோர்
நின்றேறும் நிலைப்பாட்டை நின்றே நேர்மை
நீங்காது குயர்சற்று நீடில் தாலும்
ஒன்ருகும் உயிர்ப்பண்பு நன்ருய் ஊறி
உருவாகும் எதிர்காலம் உணர்வில் கொண்டு
வென்ருகும் வரைமுந்திச் சென்ருல் நல்லூர்
வேளாதம் மலருணர வருளல் வேண்டும்!

வெள்ளாட்டு புலவர்களின் வேண்டாப் பேச்சில்
வெறும்வசையைச் சப்புவதில் விற்பார் நேரம்
மூள்ளுட்டில் மூள்நீக்க முன்னே மூச்சாய்
முன்னேற முயல்வார்கள் முயற்கொம் பாகும்
சொன்னாங்டில் அருகுழல் கோயில் மேளம்
சொர்க்கெசக்க ரக்கென்று குதிப்பார் பின்னர்
தன்னாட்டம் தலைமீறத் தாமே தாழ்வார்
தண்ணல்லூ ரோயின்னர் தழைத்தல் வேண்டும்!

எடுப்பார்கள் இடிப்போர்கள் தடுப்பார் தாங்கார்
ஏனென்ருல் ஏனென்பார் எண்ணுர் ஏதும்
முடிப்பார்கள் முயல்வோர்கள் முயலார் முந்தி
முற்ருகச் சிந்தனைகள் முன்பின் இன்றிக்
கெடுப்பார்கள் கேட்டாலோ கேளாக் காது
குடிப்பார்கள் குதர்க்கங்கள் உளறிச் சும்மா
நடிப்பார்கள் இவர்போக்கை நல்லூர்த் தேவா
நாமுய்ய அறிவுவழி நாட்டல் வேண்டும்.

ஓட்டாரிபில் சென்ருங்கே ஓமாம் என்றே
ஓடேற்றிப் பலகைக்கம் ஓடி ஆடி
விட்டார்கள் பலபேர்கள் வீரம் மானம்
விற்ருர்கள் இனப்பண்பு வீணே தாமாய்க்
கெட்டார்கள் முப்பாலைக் கேட்டார் இல்லைக்
கெலித்தபட்டு விளையாட்டுக் கீசு மாச்சுத்
தட்டாத நல்லறிவுத் தனிநல் லூரோய்
தாமாக இவர்மாறத் தரல்நீ வேண்டும்!

நம்மவர்கள் நல்லவர்கள் நல்லூர் வேளா
நற்செயலில் வல்லவர்கள் நல்லோ ஆனல்
தம்மையறி யாதவர்கள் தமிழின் பண்பின்
தன்மைதெரி யாதவர்கள் அதனல் தாழ்ந்தார்
வெம்மையறா சாட்சியின வெந்தார் நொந்தார்
வேறுபட நின்றுரிமை விட்டார் கெட்டார்
செம்மையுடன் செந்தமிழர் சிறப்பாய் ஓங்கச்
செய்தருள வேண்டுமெழிற் றேர்நல் லூரோய்!

(முற்றும்)

## இலங்கை நாட்டியக் குழுவுக்குப் பாராட்டு

லண்டன், ஆக. 14

பிரிட்டன் வந்துள்ள சித்திரசேன நடனக்குழுவினருக்கு பிரிட்டிஷ் பத்திரிகைகள் அமோகப் பாராட்டுக்களைத்தெரிவித்துள்ளது. லண்டனில் ஸடேலர்ஸ் வெல்ஸ் தியேட்டரில் இந்நடனக்குழுவினர் தம்பத்துநாள் நிகழ்ச்சிகளைத் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

அவர்களது 'பாரம்பரிய கண்டிய நடனங்கள் சிறப்பாக அமைந்துள்ளன' என்று 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை கூறியது. கார்டியன் பத்திரிகையின் விமர்சகரை கண்டிய மேளக்காரர்கள் வெகுவாகக் கவர்ந்து விட்டார்கள். 'அவர்களே நடனத்தை ஆரம்பிக்கிருர்கள். அவர்களே நிகழ்ச்சியை முடிக்கவும் செய்கிருர்கள். மேளம் அடிப்பவர்களிடையே ஏற்படும்போட்டி சுவாரஸ்யம் மிக்கது' என்று அவ்விமர்சகர் குறிப்பிட்டார்.

"பினன்ஷியல் டைம்ஸ்" பத்திரிகையின் விமர்சகர் எழுதியதாவது: 'அழகழகான ஆடைகள், முரசொலி, பல்வேறு நடனவகைகள் எல்லாம் சேர்ந்து கடந்த இரவு நிகழ்ச்சி மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது.

செவ்வாய்க்கிழமைநடந்த ஆரம்ப நிகழ்ச்சியில் தற்போது லண்டனில் இருக்கும் நான்கு இலங்கை எம். பீக்களும் கலந்து கொண்டனர்.

நடனக் குழுவினரைக் கௌரவிக்குமுகமாகப் புதன் கிழமை இலங்கை ஹைகமி

## வேதாரணியத்தில் வடபகுதி மீனவர்

பருத்தித்துறை ஞாயிறு

வடபகுதியிலிருந்து வள்ளங்களில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் இந்தியக் கரையைச் சென்று அடைந்திருப்பதாக அறிவித்தல் கிடைத்துள்ளது. கே. மோசஸ் தாஸ், எஸ். மார்க்கண்டு என்னும் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த இருமீனவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த கே. கதிரவேலுவும் வேதாரணியம் பொலிஸின் பாதுகாப்பிலுள்ளனராம். அவர்கள் சென்ற வள்ளமும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாம்.

இவர்களை இங்கு திருப்பிக் கொண்டுவருவதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கிழக்குக் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து மேற்கொண்டுள்ளார். இதுசம்பந்தமாக இவர் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டுள்ளார்.

ஷனர் திரு திலக். ஈ. குணரத்னவும் ஒரு வரவேற்புபசாரத்தை நடத்தினர்.

## சரணை விதிகளை கடைப்பிடித்தால்

மாவிட்டபுரம், ஞாயிறு

"எமது எதிர்கால சமுதாயம் நோயற்ற திடகாத்திரமான சமுதாயமாக திகழ வேண்டுமானல் சகல மாணவர்கள், ஏனைய சிறுவர்கள் எல்லோரும் சாரணியப் படையில் சேர்ந்து நாட்டுக்குத் தொண்டாற்றும் நற்பிரஜைகளாக திகழ முயற்சிக்கவேண்டும்".

இவ்வாறு காங்கேசன் துறையில் புதிதாக அங்குராற்பணம் செய்யப்பட்ட கடற்சாரணர், திரிசாரணர் படையின் ஆதரவில் நடந்த விசேடகூட்டமொன்றில் கலந்து உரையாற்றிய யாழ் மாவட்ட சாரணர் சங்க கௌரவ செயலாளர் திரு. ச. ஆர் வில்லியம்ஸ் கூறினர்.

திரு என் போஜன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

சாரணவிதியில்நம்பிக்கை, பணிவு, உதவி, மகிழ்ச்சி என்ற நான்கினையுமே சிறப்பாக கடைப்பிடித்து ஒரு சாரணர் ஒழுகுவாராயின் ஓர் சிறந்த பிரஜையாக முடியும் என்ருர்.

சாரணுளர் திரு என். போஜன் பேசுகையில்: சாரணியத் துறையில் சின்னங்களை அதிகம் எடுப்பதிலும் பார்க்க அவற்றின் முக்கியத்தை அறிவதுடன் எவ்விடத்திலும் யார்க்கு எவ்வித சேவையாற்ற வேண்டும் என்பதை அறிந்து சேவை

## மன்னர் மாவட்ட இணக்கசபை

மன்னர், வெள்ளி

மன்னர் மாவட்டத்திலுள்ள பேசாலை, எருக்கலம்பிட்டி, தாராக்குண்டு ஆகிய வற்றின் இணக்கசபைக்கு புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எருக்கலம்பிட்டி: தலைவராக ஜனப் கே சாஹில் ஹமீது தெரிவு செய்யப்பட்டுள்ளார் 27 அங்கத்தவர்கள் அவரின் கீழ் இயங்குவர்.

தாராக்குண்டு: 31 அங்கத்தவர்களின் தலைவராக ஜனப் ஓ. கே செய்னுலாப்தீன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

பேசாலை: திரு ஈ. எம். பீரிஸ் தலைமையில் 27 அங்கத்தவர்கள் செயல்படுவர்.

கோண்டை, சனி

கொழும்பு மாவட்டத்தில் பன்னிரண்டு பண்ணை நிறுவனங்கள் திறவப்பட இருக்கின்றன.

இத்தகவலை கொழும்பு அரசாங்க அதிபர் நேற்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது:

இந்த பண்ணைகள் கூட்டுறவு முறையில் இயங்கும் என்றும். அத்தனகல மற்றும் இடங்களிலும் இவை போன்ற பண்ணைகள்மேலும் நிறுவப்பட்டு இவைகள் கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவுசெய்யப்படும்.

ற்ற வேண்டும். அதுவே சாரணியத்தின் சிறந்த குறிக்கோளாகும் என்ருர்.

## பெருமாள் கோவில் மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் நாளைமறுதினம் புதன்கிழமை 45-ம் நாள் மண்டலாபிஷேக விழா நடைபெற விருக்கிறது. காலை 10 மணிக்கு நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும், விநாயகர், ரங்கநாதர், மகாலட்சுமி, ஆண்டாள், நவக்கிரகமூர்த்திகளுக்குநவகலசஸ்நபனாபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகமும் தீபாராதனையும் நடைபெறும். இரவு 7 மணிக்கு புஷ்பவிமான புன்னைவிருட்ச கோபிகாஸ்திரீ வஸ்திராபஹரண அனுக்கிரகக் காட்சி இடம் பெறும்.

## நல்லையில் இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூரில் இன்றிரவு கைலாசவாகனக் காட்சி.

மாலை 6-30 மணிமுதல் திருப்புகழ் மண்டப இசையரங்கில் திரு. பொன் சுந்தரலிங்கம் பக்திப்பாடல் பாடுவார்.

இரவு 9-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் திருவிளையாடற் புராணத் தொடர் விரிவுரையில் சமணரைக் கழுவேற்றிய பாகத்தைக் கதைசெய்வார்.

சிறந்த
தரமான
அச்சுவேலைகளுக்கு
'ஈழநாடு'
வர்த்தக அச்சகப்பகுதி
யாழ்ப்பாணம்.

